# குளித்தலை நகராட்சி

11.10.2018.ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் செப்டம்பர்–2018.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர்–2018.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. அரசு ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(MA IV) துறை, நாள்–19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(MA IV) துறை, நாள்–26.07.2018.ன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4.ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ், குளித்தலை நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகளின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.20555/2018/ஆர்1 எண்ணிட்ட 21.08.2018.ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள 16.08.2018.ஆம் தேதிய கூட்ட நடவடிக்கைகளின்படியும், அதன் நெறிமுறைகளை பின்பற்றி குளித்தலை நகராட்சியில் 01.04.2018 முதல், மண்டலங்களின் அடிப்படை மதிப்பை (Zonel Value) மாற்றியமைக்க, பொதுமக்கள் ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் இருப்பின் 30–நாட்களுக்குள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற தீர்மானம் எண்.167, நாள்–31.08.2018.ல் ஒப்புதல் வழங்கப்பட்டதன்பேரில், 11.09.2018.ஆம் தேதியில் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. 30.தினங்கள் ஆகியும் பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசணை மற்றும் ஆட்சேபணைகள் வரப்பெறவில்லை. எனவே, கீழ்க்கண்ட விபரப்படி 01.04.2018 முதல் மண்டலங்களின் மதிப்பை மாற்றியமைக்க அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் | தற்போதுள்ள மண்டல அடிப்படை மதிப்பு | 01.04.2018 முதல் மாற்றியமைக்கப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பு |
|---|---|---|---|
| 1) | A | 0.60 பைசா | 1.00 ரூபாய் |
| 2) | B | 0.50 பைசா | 0.80 பைசா |
| 3) | C | 0.30 பைசா | 0.50 பைசா |

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). கரூர் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2355/2018/அ1)

பொருள்– 04. அரசு ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(MA IV) துறை, நாள்–19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(MA IV) துறை, நாள்–26.07.2018.ன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4.ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ், குளித்தலை நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகளின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.20555/2018/ஆர்1 எண்ணிட்ட 21.08.2018.ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள 16.08.2018.ஆம் தேதிய கூட்ட நடவடிக்கைகளின்படியும், அதன் நெறிமுறைகளை பின்பற்றி குளித்தலை நகராட்சியில் 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள, Zone A, B மற்றும் C மண்டலங்களில் உள்ள தெருக்களின் மண்டலங்களை கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்க, பொதுமக்கள் ஆலோசணை மற்றும் ஆட்சேபணைகள் இருப்பின் 30–நாட்களுக்குள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற தீர்மானம் எண்.168, நாள்–31.08.2018.ல் ஒப்புதல் வழங்கப்பட்டதன்பேரில், 11.09.2018.ஆம் தேதியில் தினந்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. 30.தினங்கள் ஆகியும் பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசணை மற்றும் ஆட்சேபணைகள் வரப்பெறவில்லை. எனவே, கீழ்க்கண்ட விபரப்படி 01.04.2018 முதல் மண்டலங்களை மாற்றியமைக்க அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | தெருவின் பெயர் | | தற்போது உள்ள மண்டல விபரம் | 01.04.2018.ல் திருத்தி அமைக்கப்பட்ட மண்டல விபரம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | (5) |
| 1 | 01 | 1. | மணத்தட்டை பள்ளர்தெரு | C | C |
| 2 | | 2. | மணத்தட்டை மேலக்குடிதெரு | C | C |
| 3 | 02 | 1. | மணத்தட்டை அக்ரஹாரம் | C | C |
| 4 | | 2. | மணத்தட்டை கடைவீதி | C | **B** |
| 5 | | 3. | மணத்தட்டை அரிசனகாலனி | C | C |
| 6 | | 4. | மணத்தட்டை பறத்தெரு | C | C |
| 7 | | 5. | மணத்தட்டை சங்கிலிராயன்கோவில்தெரு | C | C |
| 8 | 03 | 1. | தேவதானம் குடித்தெரு | C | C |
| 9 | | 2. | கடம்பர்கோவில் பள்ளர்தெரு | C | C |
| 10 | | 3. | கடம்பர்கோவில் சுவீகாரத்தெரு | C | C |
| 11 | | 4. | வைகநல்லூர் குயவர்தெரு | C | C |
| 12 | | 5. | பழையடோல்கேட் மேல்புறம் | C | **A** |
| 13 | 04 | 1. | நாப்பாளையம் | B | B |
| 14 | | 2. | வைகநல்லூர் எலிமெண்டரிஸ்கூல்தெரு | B | **A** |
| 15 | | 3. | கடம்பர்கோவில் காவல்காரதெரு | B | B |
| 16 | | 4. | கடம்பர்கோவில் கடைத்தெரு | B | **A** |
| 17 | 05 | 1. | வைகைநல்லூர் அக்ரஹாரம் 2.ஆம் பகுதி | A | A |
| 18 | | 2. | பழையடோல்கேட் கீழ்புறம் | A | A |
| 19 | 06 | 1. | வைகைநல்லூர் அக்ரஹாரம் முதல்பகுதி | A | A |
| 20 | 07 | 1. | கடம்பர்கோவில் வடக்குமடவளாகத்தெரு | B | B |
| 21 | | 2. | கடம்பர்கோவில் மேற்குமடவளாகத்தெரு | B | B |
| 22 | | 3. | கடம்பர்கோவில் கிழக்குமடவளாகத்தெரு | B | B |
| 23 | | 4. | கடம்பர்கோவில் தெற்குமடவளாகத்தெரு | B | B |
| 24 | | 5. | கடம்பர்கோவில் பகவதிஅம்மன்கோயில்தெரு | B | B |
| 25 | 08 | 1. | கீழமுதலியார்தெரு | B | B |
| 26 | | 2. | சபாபதிநாடார்தெரு | B | B |
| 27 | | 3. | கம்மாளர்தெரு | B | B |
| 28 | 09 | 1. | சிங்காரத்தோப்புதெரு | B | B |
| 29 | | 2. | புதுக்கோர்ட்தெரு | A | A |
| 30 | 10 | 1. | பேராளம்மன்கோவில்தெரு கீழ்புறம் | B | **A** |
| 31 | | 2. | கன்னிமார்கோயில்தெரு | B | **A** |
| 32 | | 3. | பள்ளிவாசல்தெரு | B | B |
| 33 | 11 | 1. | எம்.பி.எஸ்.அக்ரஹாரம் | A | A |
| 34 | | 2. | டவுன்ஹால்தெரு | A | A |
| 35 | | 3. | காங்கிரஸ்ரோடு | A | A |
| 36 | 12 | 1. | கீழக்கொடிக்கால்தெரு | B | B |
| 37 | | 2. | மாரியம்மன்கோயில்தெரு | B | B |
| 38 | | 3. | காசுக்காரசெட்டிதெரு | B | B |
| 39 | | 4. | வடக்குமுத்துராஜாதெரு | B | B |
| 40 | 13 | 1. | வைசியாள்தெரு | B | **A** |
| 41 | | 2. | சௌண்டீஸ்வரிஅம்மன்கோயில்தெரு | B | B |
| 42 | | 3. | நாராயணன்பிள்ளைதெரு | B | B |
| 43 | | 4. | வண்டிப்பேட்டைதெரு | B | B |
| 44 | 14 | 1. | மீன்காரதெரு | C | C |
| 45 | | 2. | சேதுரெத்தினம்பிள்ளைதெரு | C | C |
| 46 | | 3. | பிள்ளைதோப்புதெரு | C | C |
| 47 | | 4. | பெரியபாலம் | C | **B** |
| 48 | | | பெரியபாலம் விஸ்தரிப்பு | C | **A** |
| 49 | | 5. | பெரியார்நகர் | B | **A** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 50 | 15 | 1. | மலையப்பநகர் | C | C |
| 51 | | 2. | மலையப்பநகர்காலனி | C | C |
| 52 | | 3. | குளித்தலை ஒட்டர்தெரு | C | C |
| 53 | | 4. | குளித்தலை பள்ளர்தெரு | C | C |
| 54 | | 5. | குளித்தலை பறத்தெரு | C | C |
| 55 | 16 | 1. | பழையகோர்ட்தெரு | B | B |
| 56 | | 2. | சோழகர்தெரு | B | B |
| 57 | | 3. | வையாபுரிநகர் | B | B |
| 58 | 17 | 1. | ஆஸ்பத்திரி கடைத்தெரு | B | A |
| 59 | | 2. | மார்க்கெட்தெரு | B | B |
| 60 | | 3. | மருதபிள்ளைதெரு | B | B |
| 61 | | 4. | கோட்டமேட்டுதெரு | B | B |
| 62 | 18 | 1. | கந்தசாமிபிள்ளைதெரு | B | B |
| 63 | | 2. | தெப்பகுளத்தெரு | B | B |
| 64 | | 3. | குளித்தலை காவல்காரதெரு | B | B |
| 65 | | 4. | செக்கடிபுதுதெரு | B | B |
| 66 | | 5. | சுயராஜ்யபுதுதெரு | B | B |
| 67 | 19 | 1. | கொல்லம்பட்டரைதெரு | B | B |
| 68 | | 2. | ஆண்டார்மெயின்ரோடு | B | A |
| 69 | | 3. | சின்னஆண்டார்தெரு | B | B |
| 70 | 20 | 1. | பேராளம்மன்கோயில்தெரு மேல்புறம் | A | A |
| 71 | | 2. | பெரியாண்டார்தெரு | A | A |
| 72 | | 3. | காவேரிநகர் கீழ்புறம் | A | A |
| 73 | 21 | 1. | ஆர்.எஸ்.ரோடு | B | B |
| 74 | | 2. | வைகைநல்லூர்பள்ளர்தெரு | C | C |
| 75 | | 3. | சத்திரம் பின்புறம்தெரு | B | B |
| 76 | 22 | 1. | காவேரிநகர் | A | A |
| 77 | 23 | 1. | அண்ணாநகர் பிள்ளையார்கோவில்தெரு | A | A |
| 78 | | 2. | என்.ஜி.ஜி.ஓ.காலனி | A | A |
| 79 | | 3. | கம்பன்தெரு | A | A |
| 80 | | 4. | கலப்புகாலனி | A | A |
| 81 | 24 | 1. | அண்ணாநகர் | A | A |

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2355/2018/அ1)

பொருள்–05. குளித்தலை நகராட்சிப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019.ஆம் ஆண்டில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.அ3/3585/2018, நாள்–29.08.2018 செயல்முறைகளில் நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் வண்டிப்பேட்டைதெரு, வைசியாள்தெரு, பிள்ளைத்தோப்புத்தெரு, வையாபுரிநகர், ஒட்டர்தெரு மற்றும் மலையப்பநகர் ஆகிய இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மினிபவர் பம்ப் பொருத்தி குடிநீர் வழங்குதல் | ரூ.8.50 |
| 2) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் தேவதானம், நமசிவாயநகர், வைகைநல்லூர்அக்ரஹாரம் பெருமாள்கோவில்தெரு, வடக்குமுத்துராஜா தெரு ஆகிய இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்பவர் பம்ப் பொருத்தி குடிநீர் வழங்குதல் | ரூ.6.50 |
| 3) | குளித்தலை நகராட்சி பள்ளிவாசல் தெருவில் வடிகாலை உயர்த்தி ஆர்.சி.சி.மூடுகல் அமைத்தல் | ரூ.5.00 |

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியின் (1)–பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலைய மின் இணைப்பு எண்.940.ன் மீட்டர் அதிக மின்அழுத்தம் காரணமாக பழுது ஏற்பட்டதற்கு, புதிய மின் மீட்டர் பொருத்துவதற்குரிய கட்டணம் ரூ.1436/– மற்றும் (2)–அலுவலக மின் இணைப்பு எண்.857.ன் மீட்டர் அதிக மின்அழுத்தம் காரணமாக பழுது ஏற்பட்டதற்கு புதிய மின் மீட்டர் பொருத்துவதற்குரிய கட்டணம் ரூ.1436/–, தமிழ்நாடு மின்சார வாரியம், குளித்தலைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, வ.எண்.1.ன்படியான செலவினம் ரூ.1436/–ஐ, குடிநீர் நிதியில் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3). அவசர அவசியம் கருதி வ.எண்.2.ன்படியான செலவினம் ரூ.1436/–ஐ, பொதுநிதியில் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2862/2018/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பயணியர் நிழற்கூடம் மேற்கூரை பழுது சரிசெய்து புதிய கூரை அமைத்தல் பணிக்கு, நாள்–03.08.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 06.08.2018 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பயணியர் நிழற்கூடம் மேற்கூரை பழுது சரிசெய்து புதிய கூரை அமைத்தல் | 1). R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், முசிறி மெயின்ரோடு, சுங்ககேட், குளித்தலை. | ரூ.6000/– |
| | | 2). ஸ்ரீவெக்காளியம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மார்க்கெட்தெரு, குளித்தலை. | ரூ.7000/– |
| | | 3). ஸ்ரீகற்பக விநாயகா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 62,திருச்சி–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.8500/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2468/2018/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி பகுதியில் உள்ள தலைமை நீரேற்று நிலையங்கள் நாப்பாளையம், பெரியார்நகர் ஆகியவற்றில், புதிய கேட்கள் செய்து, கிணற்றுக்கு மேல்மூடி அமைத்தல் பணி மேற்கொள்ள, நாள்–03.08.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 06.08.2018 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி தலைமை நீரேற்று நிலையங்கள் நாப்பாளையம், பெரியார்நகர் ஆகியவற்றில் பாதுகாப்பிற்கான புதிய கேட்கள் அமைத்து கிணறுகளுக்கு மேல்மூடி அமைத்தல். | R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், முசிறிமெயின்ரோடு, சுங்ககேட், குளித்தலை. | ரூ.20,000/– |
| | | ஸ்ரீவெக்காளியம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மார்க்கெட்தெரு, குளித்தலை. | ரூ.22,000/– |
| | | ஸ்ரீகற்பக விநாயகா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 62,திருச்சி–கரூர்மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.24,000/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், குளித்தலை நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2490/2018/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்தில் வசூல் மைய அமைவிடம், லஞ்ச ஒழிப்பு துறை விளம்பரம் மற்றும் பேருந்து நிலையத்தில் திருச்சி மார்க்க பேருந்துகளின் கால அட்டவணை விளம்பர பலகைகள் அமைத்தல் பணிக்கு, நாள்–03.08.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 06.08.2018 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்தில் வசூல் மைய அமைவிடம், லஞ்ச ஒழிப்புத் துறை விளம்பரம் மற்றும் பேருந்து நிலையத்தில் திருச்சி மார்க்க பேருந்துகளின் கால அட்டவணை விளம்பர பலகைகள் அமைத்தல். | 1). R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், முசிறிமெயின்ரோடு, சுங்கேட், குளித்தலை. | ரூ.11500/– |
| | | 2).ஸ்ரீவெக்காளியம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மார்க்கெட்தெரு, குளித்தலை. | ரூ.12,000/– |
| | | 3). ஸ்ரீகற்பக விநாயகா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 62,திருச்சி–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.13,000– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், குளித்தலை நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2468/2018/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பகுதியில், காவேரி ஆற்றின் கரை பகுதிகளில் நாப்பாளையம், கடம்பர்கோவில்துறை, பெரியபாலம் பரிசல்துறை ஆகிய மூன்று இடங்களில், வெள்ள அபாய எச்சரிக்கை விளம்பர பலகை அமைத்தல் பணி மேற்கொள்ள, நாள்–01.08.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 02.08.2018 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | காவேரி ஆற்றுகரை பகுதிகளில் நாப்பாளையம், கடம்பர்கோவில்துறை, பெரியபாலம் பரிசல்துறை ஆகிய மூன்று இடங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விளம்பர பலகை அமைத்தல் | 1). ஸ்ரீசக்தி டிங்கரிங் & வெல்டிங் ஒர்க்ஸ், திருச்சி–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.4900/– |
| | | 2). ஸ்ரீவெக்காளியம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மார்க்கெட்தெரு, குளித்தலை. | ரூ.5500/– |
| | | 3). R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், முசிறி மெயின்ரோடு, சுங்கேட், குளித்தலை. | ரூ.6000/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீசக்தி டிங்கரிங் & வெல்டிங் ஒர்க்ஸ், நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2465/2018/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி தந்தை பெரியார் காவிரி ஆற்று பாலத்தில், குளித்தலை நகராட்சி எல்லை முடிவு விளம்பர பலகை அமைத்தல் பணிக்கு, நாள்–01.08.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 02.08.2018 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி தந்தை பெரியார் காவிரி ஆற்று பாலத்தில் குளித்தலை நகராட்சி எல்லை முடிவு விளம்பர பலகை அமைத்தல் | R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், முசிறி மெயின்ரோடு, சுங்கேட், குளித்தலை. | ரூ.2500/– |
| | | ஸ்ரீவெக்காளியம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மார்க்கெட்தெரு, குளித்தலை. | ரூ.3000/– |
| | | ஸ்ரீசக்தி டிங்கரிங் ஒர்க்ஸ், திருச்சி–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.3500/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2467/2018/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ந.க.எண்.38162/பி3/2014–3, நாள்–22.01.2015.ல் அனுமதி அளிக்கப்பட்டு, 01.08.2015.ல் ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் 31.07.2018 முடிவடைந்துள்ளது. 01.08.2018 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணிசெய்ய மன்ற தீர்மானம் எண்.64, நாள்–28.03.2018.ல் அனுமதிக்கப்பட்டதன்பேரில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பு இவ்வலுவலக ந.க.எண்.1242/2018/எச்1–1, நாள்–11.06.2018 மூலம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் வழியாக அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி செயற்குறிப்பை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள், பரிந்துரை செய்து ந.க.எண்.2392/2018/அ4, நாள்–13.06.2018.ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை எதிர்நோக்கி, மேலும் இந்நகராட்சி பகுதி பொதுமக்களின் அத்தியாவசிய பணியான பொது சுகாதாரம் பேணும் வகையில், இந்நகராட்சி மன்ற தீர்மானம் எண்.142, நாள்–09.08.2018.ல் ஏற்கனவே துப்புரவு பணியை மேற்கொள்ளும் ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் நிறுவனத்தார்மூலம் தொடர்ந்து 01.08.2018 முதல் 31.10.2018 வரையிலான காலத்திற்கு பணிமேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி காலம் 31.10.2018.ல் முடிவடையவுள்ளதால், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவை எதிர்நோக்கி, இந்நகராட்சி பொதுமக்களின் பொது சுகாதார நலன்கருதி, தொடர்ந்து 52 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 01.11.2018 முதல் 31.01.2019 வரை மூன்றுமாத காலத்தற்கு, ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை நிறுவனத்தின்மூலம் துப்புரவுபணி மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலைப்பட்டியலின்படி தினக்கூலி செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பொதுமக்களின் அத்தியாவசிய பணியான பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களின் உத்தரவை எதிர்நோக்கி ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை நிறுவனத்தின்மூலம் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 01.11.2018 முதல் 31.01.2019 முடிய மாவட்ட ஆட்சியார் அவர்களின் தரவிலைப்பட்டியலின்படி தினக்கூலி வழங்கலாம். இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து / திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் லாரி TN-47-E-0264.ன் தகுதிச்சான்று 26.11.2018.ல் முடிவடைகிறது. அதன் தகுதி சான்றினை புதுப்பிக்க பழுது பார்ப்பு செலவினம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக கட்டணங்கள் உள்பட ரூ.2,14,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து பதினான்காயிரம் மட்டும்) உத்தேச செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3201/2018/இ1)

*******

**குளித்தலை நகராட்சி**

11.10.2018.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 200 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 201 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 202 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 4 | 203 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 5 | 5 | 204 | பதிவு செய்யப்பட்டது. |
| 6 | 6 | 205 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 206 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 207 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 208 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 209 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 210 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 211 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 212 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.